**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.141/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Harikrishnan | Prosecution | P.W-1, L.W-2 |
| Father Name | Rajamanickam | Defence | |
| Village | Periya theru, Puliyanthurai | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 62 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்கார்கள் ஆவார். கடந்த 19.08.2017 அன்று காலை 10.30 மணிக்கு நானும் என் மகனும் வீட்டில் இருந்த போது அன்று இரவு மழை பெய்யததால் மாடி முழுவதும் தண்ணீர் தேங்கி இருந்ததது. அடைப்பை நான் எடுத்து விட்டு தண்ணீரை வெளியேற்றி விட்டு கொள்ளை புறத்தில் குளிக்க சென்று விட்டேன். என் மகனுக்கும் ரவிக்கும் சண்டை நடந்த சத்தம் கேட்டு நான் கொள்ளையில் இருந்து வந்த பாரத்த போது ஒப்பன் பெரியா அளா புண்டையா என்று காமகுரோதமான வார்த்தைகாலல் திட்டி உன் வீட்டு மாடி தண்ணீர் என் வீட்டு வழியாக போதுனு சொல்லி திட்டி ரவியும் ரவி மகன் சுதாகர் மற்றும் தமிழ்வாணன் ஆகிய மூவரும் கழியாலும் கல்லாலும் என் மகனை அடித்தார்கள். நான் சென்று ஏன் மகனை அடிக்கிறிர்கள் என்று கேட்டதற்கு என்னை அடித்தார்கள். பிறகு எதிரி வீட்டில் உள்ள சாந்தி, சந்திரா, அசோக்,ராம்கி ஆகியோர் வந்து விளக்க வந்தார்கள். தடுக்க வந்த ராம்கி மற்றும் அசோக்கை எதிரிகள் அடித்தார்கள். அதை தடுக்க வந்த சாந்தி மற்றும் சந்திரா இருவரயும் தள்ளிவிட்டார்கள். அதில் சாந்தி மற்றும் சந்திரா இருவருக்கும் நெஞ்சு வலி வந்து விட்டது. பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து 6 நபர்களையும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சீர்காழி மருத்துவமனையில் போலீசார் விசாரித்து வாக்குமூலம் பெற்று கொண்டார்கள். என்னிடமும் என் மகன்னிடமும் விசாரித்தார்கள் என் மகன் புகார் வாக்குமூலம் அளித்தார் அப்போது நான் உடன் இருந்தேன். என் மகன் சொல்ல சொல்ல புதுப்பட்டினம் போலீசார் எழுதி கொண்டு என் முன்னிலையில் என் மகனிடமும் படித்து காண்பித்தார்கள். நீதிமன்றத்தில்

என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என் மகனின் கையெழுத்து தான் அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள். என் மகன் ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் நான் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. எதிரிகள் பிரச்சனை செய்கிறார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் மகன் ஊராட்சி மகன் என்றால் சரிதான். சாட்சி சாந்திரா எனது உறவினர் என்றால் சரிதான். சாந்தி எனக்கு அண்ணன் தம்பி உறவு முறையில் கூப்பிடுவோம் என்றால் சரிதான். சாட்சி அசோக்குமார் சாட்சி சாந்தியின் மகன் ஆவார் என்றால் சரிதான். சாட்சி பழனிசாமி குண்டுமேட்டு தெரு என்றால் சரிதான். சாட்சி ராமலிங்கம் என் வீட்டிற்கு பக்கத்து வீடு என்றால் சரிதான். சம்பவத்தின் போது நாங்கள் எதிரிகளை அடித்து காயம் படுத்தினோம் என்றால் சரிதான். நாங்கள் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது எதிரிகள் நான்குபேரும் அதே அரசு மருத்துவமனையில் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. போலிசார் எங்களிடம் அரசு மருத்துவமனையில் இருக்கும்போது எங்களிடம் வாக்குமூலம் பெற்றதுபோல் எதிரிகளிடமும் போலிசார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புதுப்பட்டினம் காவல்நிலையத்தில் அ.சா.1 லெனின் மற்றும் அவரை சார்ந்த 6 நபர்கள்மீது வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். குற்ற எண். 202/2017 u/s 147, 294(b), 323, 336, 506(ii)IPC மற்றும் 4 of TNPWH ன் கீழ் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சமூக நீதிமன்றத்தில் நடந்து முடிந்து விடுதலை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளை நானும் என்னுடன் சேர்ந்தவர்களும் கல்லால் அடித்தோம் என்றால் சரியல்ல. நாங்கள்தான் எதிரிகளை கல்லாலும் கட்டையாலும் அடித்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில்தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். வேறு எங்கும்போலிசார் என்னை விசாரிக்கவில்லை. மற்ற சாட்சிகளையும் போலிசார் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. என் மகன் ஊராட்சிமன்ற தலைவராக இருப்பதால் அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகளை அடித்துவிட்டு எதிரிகள்மீது பொய்வழக்கு போட்டுள்ளாளார்கள் என்றால் சரியல்ல. நான் சமூதாயத்தின் தலைவர் என்றால் சரிதான். நான் சமூதாயத் தலைவர் என்பதாலும், என் மகன் ஊராட்சிமன்ற தலைவராக இருப்பதால் அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி எதிரிகளை அடித்துவிட்டு எதிரிகள்மீது பொய்வழக்கு போட்டுள்ளாளார்கள் என்றால் சரியல்ல. என் மகன் வழக்கிற்கு பின்னிட்டுதான் ஊராட்சிமன்ற தலைவர் ஆனார். எதிரி ரவி வீட்டின்மீது மழை பெய்த நீரை திறந்துவிட்டகாரணத்தினால் எதிரி வீடு பாதிக்கப்படும் என்று கேட்டதால் நான் பொய்யாக அவர்மீது வழக்கு போட்டேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை திட்டவில்லை, அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

நாங்கள் எதிரியை திட்டி அடித்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.141/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | **சாந்தி** | Prosecution | P.W-2, L.W-3 |
| Husband Name | **சேகர்** | Defence | |
| Village | Periya theru, Puliyanthurai | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 55 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள் ஆவார். சாட்சி லெனின் எனது கணவரின் பங்காளி முறையில் சகோரரின் மகன் ஆவார். அ.சா.1 எனது கணவரின் அண்ணன் உறவு முறையாவார். கடந்த சில வருடங்களுக்கு மூன்பு அ.சா.1 க்கும் அ.சா.1 ன் மகனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே சண்டை நடந்தது இருவரும் ஒருவருக்கொருவர் கம்பு கட்டையால் அடித்துக்கொண்டார்கள். காயம் ஏற்பட்டு இருவரும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிளும் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். என் மீதும் எதிரிகள் வழக்கு போட்டிருந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்பவம் எதுவும் தெரியாது என்றாலும் நான் எதிரிகளை அடித்துவிட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்குபோட்டு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No.CC.141/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அசோக்குமார் | Prosecution | P.W-3, L.W-5 |
| Father Name | சேகர் | Defence | |
| Village | Periya theru, Puliyanthurai | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 30 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **09.09.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்காரர்கள் ஆவார். கடந்த 19.8.2017 ஆம் வருடம் காலை 10.30 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்து வெளியேவந்தபோது எனது அம்மா சாந்தியை எதிரிகள் ரேனுகா, சுபிதா இருவரும் அடித்துக்கொண்டிருந்தார்கள். ஏன் அடிக்கிறீர்கள் என்று நான் கேட்டதற்கு என்னையும் அடித்தார்கள். என் அம்மா மயங்கி கீழேவிழுந்தவுடன் 108 ஆம்புலன்சுக்கு போன்செய்து சீர்காழி அரசு மருத்துவமனைக்கு நானும் என் அம்மா சாந்தி, நானும், ராம்கி, ஷரிகிருஷ்ணன், சந்திராவை, லெனின் ஆகியோர் சிகிச்சைக்காக வந்துவிட்டோம். போலிசார் என்னை சீர்காழி அரசுமருத்துவமனையில்வைத்து விசாரித்தாரக்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை அரசு மருத்துவமனைதவிர வேறு எங்கும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என்மீதும் மற்றும் அரிகிருஷ்ணன் ராம்கி, சேகர், சாந்தி ஆகியோர் மீது புதுப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண். 202/2017 u/s 147, 294(b), 323, 336, 506(ii)IPC மற்றும் 4 of TNPWH ன் கீழ் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளனர் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது இந்த வழக்கு சாட்சிகளான நாங்கள் அனைவரும் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம் என்றால் சரிதான். அ.சா.1 ன் மகன் லெனின் மற்றும் அ.சா.1 எனக்கு உறவினர் அல்ல எதிர்வீட்டுக்காரர்கள். நாங்கள் அனைவரும் எதிரிகளை அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்குதொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அம்மா சாந்தி

மற்றும் சந்திரா ஆகிய இருவரும் சேர்ந்து எதிரியான ரேனுகா மற்றும் சுபேதா ஆகியோர்களை தாக்விட்டு எதிரிமீது பொய்யாக வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**